மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், தலைவர் கலைஞர் அவர்கள் இதற்கு ஆதரவு மட்டும் தெரிவிக்கவில்லை. சட்டம் வந்தவுடன், இந்தியாவில் முதல் மாநிலமாகத் தமிழகத்தில் இந்த ஆணையத்தை உருவாக்கியதும் தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் இந்த ஆணையத்தின் செயல்பாட்டைச் சிறப்பிப்பதற்குப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த ஆணையம் ஆறு உறுப்பினர்கள் கொண்டது;* it is a last resort for Right of Appeal. *ஆங்காங்கே அரசாங்கத்தில் ஒவ்வோர் இடத்திலும்,* designated, RTI reply *கொடுக்க வேண்டிய* officers *துறைவாரியாக, இடம்வாரியாக இருக்கிறார்கள். அங்கே தகவல் பெறமுடியவில்லை என்றால்,* appeal *ஆக, படிப்படியாக இங்கே வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. எங்கள் முயற்சி இதை முழுவதுமாக* online *மூலமாக* immediate action *ஆக* digital *ஆக மாற்றுவதற்குத்தான் கவனம் இருக்கிறதே தவிர, கூடுதல் அலுவலகத்தை உருவாக்குவது, தலைமை அலுவலகமாக உருவாக்குவது, அந்தளவுக்கான பணி செய்ய இயலாது என்று கருதுகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

வக்ஃப் வாரியம்

***202—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களின் உரிமை ஆவண விவரங்களை அதன் இணையதளத்தில் வெளியிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

2021 செப்டம்பர் 6]

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களின் உரிமை ஆவண விவரங்களை அதன் இணையதளத்தில் வெளியிட அரசு முன்வருமா என்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவிற்கான விடையை பின்வருமாறு அளிக்கின்றேன்:

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டில், வக்ஃப் சொத்துகளின் விவரங்கள் அனைத்தும், மத்திய வக்ஃப் கழகத் திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கணினிமயமாக்கப்பட்டுள்ள தகவல்கள் www.wamsi.nic.in *என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்தகவல்களைத் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்* www.tnwakfboard.com *என்ற வலைதளத்தில் பார்வையிடலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முற்பகல் 10–15

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய சமுதாயத்தின் ஆன்மிகப் பணிகளுக்காக முன்னோர்கள், தொடர்ச்சியாக விலை மதிப்பற்ற சொத்துகளை வக்ஃப், அதாவது இறைவனுக்காக தானம் செய்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் சுமார் 7,500 வக்ஃபுகள் இருக்கின்றன. இந்த வக்ஃபுக்குச் சொந்தமான சொத்துகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன; அவற்றின் பெயர் என்ன; அதில் இப்போது குத்தகைதாரர்களாக, வாடகைதாரர்களாக யார் இருக்கின்றார்கள் என்ற விவரங்கள் நிச்சயமாக இணையதளத்தில் வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தினுடைய இணையதளத்தில் நான் இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னால் சென்று பார்த்தபோது, அதுபோன்ற எந்த விவரமும் அதில் வெளியிடப்படவில்லை. மேலும், அந்த இணையதளம் முற்றிலுமாக ஆங்கிலத்தில் இருக்கின்றது. எனவே, கணினிமயமாக்கப்படுவது என்பது ஒன்று; கணினிமயமாக்கப்பட்டதை இணையதளத்தில் வெளியிடுவது என்பது மற்றொன்று. இந்த ஆட்சி, நம்முடைய மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி, ஒரு வெளிப்படைத் தன்மையான ஆட்சியாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் அனைத்து வக்ஃப் சொத்துகள் பற்றிய விவரங்கள், இணையதளத்தில் தமிழில் வெளியிடப்படுமா என்று மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் சொத்துகளின் விவரங்களைக் கணினிமயமாக்குதல்; தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து வக்ஃப் சொத்துகளின் விவரங்களையும் மின்நகல் எடுத்து, மத்திய வக்ஃப் கழகத் திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கணினிமயமாக்கப்பட்டுள்ள தகவல்கள், ஏற்கெனவே சொன்னது மாதிரி, www.wamsi.nic.in/wamsi/base/home.jsp என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்தகவலைத் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின், www.wakf.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பினைச் சொடுக்கு செய்து பொதுமக்கள் பார்வையிடலாம். தமிழ்நாட்டில் 7,250 சன்னி வக்ஃப் நிறுவனங்களும், 202 ஷியா வக்ஃப் நிறுவனங்களும், ஆக மொத்தம் 7,452 வக்ஃப் நிறுவனங்களில், 53,428 வக்ஃப் சொத்துகள் உள்ளன. தமிழ்நாட்டின் 7,452 வக்ஃப் நிறுவனங்களில், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில், 2,814 வக்ஃப் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 4,638 நிறுவனங்கள் இன்னும் பதிவு செய்யவில்லை. நிலுவையில் உள்ள நிறுவனங்களில் 1,303 வக்ஃப் நிறுவனங்களுக்கு முதற்கட்டமாக வக்ஃப் சட்டம் 1995, பிரிவு 45 இன்கீழ் பதிவு செய்ய தகவல் அனுப்பப்பட்டதில், குறுகிய காலத்தில் நம் புதிய அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 45 நிறுவனங்களின் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஆங்கிலத்தில் இருப்பதை தமிழில் மாற்றுவதற்கு ஆவன

2021 செப்டம்பர் 6]

செய்யப்படும்; உறுதி செய்யப்படும் என்பதையும் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரமாகச் சொன்னார்கள். கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள அந்த வக்ஃப் சொத்துக்கள், மாவட்டங்களில் இருக்கக்கூடிய வஃக்ப் ஆய்வாளர்கள் மற்றும் வக்ஃப் கண்காணிப்பாளர்கள் ஆகியோரால் கடந்த ஆட்சியில் ** NOC என்று சொல்லக்கூடிய, இது வக்ஃப் சொத்து இல்லை, விற்பனை செய்யலாம் என்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேளுங்கள், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்குத்தான் வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றிதான் சொல்லவேண்டும். வக்ஃப் வாரிய இணையதளம் தமிழில் வரவேண்டும் என்று கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வக்ஃப் இணையதளம் தமிழில் வரும் என்று கூறிவிட்டார்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கிற உரிமை இருக்கிறது இல்லையா; இரண்டாவது கேள்வியைக் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இரண்டாவது கேள்வியில், கேள்வியை மட்டும் கேட்டு முடியுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைத்தான் கேட்கிறேன். இந்த NOC-யை வக்ஃப் ஆய்வாளர்களும், வக்ஃப் கண்காணிப்பாளர்களும் அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கக்கூடிய. . . (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இல்லை, உட்காருங்கள். நான் சொல்கிறேன். உறுப்பினர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, கேள்வியைக் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரம் இருக்கக்கூடிய ஒரு சூழலில், ** வகையில், அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். வக்ஃப் ஆய்வாளர்களுக்கும், வக்ஃப் கண்காணிப்பாளர்களுக்கும் இருக்கக்கூடிய அந்த அதிகாரம். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.* Wakf Board*-ல் இதை இப்படி மாற்றியிருக்கிறார்கள்; அதைச் சரி செய்து கொடுங்கள் என்று மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேளுங்கள். குற்றச்சாட்டே வரக்கூடாது.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு இல்லாமல் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு சொன்னதையெல்லாம் நீக்கி விடுகிறேன். கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் சொத்துகளுக்காக. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டு நீக்கப்பட்டது. அதை விடுங்கள். நீக்கப்பட்டுவிட்டது, உட்காருங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் சொத்துகளை வகை மாற்றம் செய்வதற்காக, மாவட்ட வக்ஃப் ஆய்வாளர்களும், மாவட்ட வக்ஃப் கண்காணிப்பாளர்களும், தடையில்லாச் சான்று* NOC *கொடுக்கக்கூடிய ஒரு நிலையின் காரணமாக ** எழுவதற்கான. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மூத்த உறுப்பினர்,* debate*-ல் நிறைய விஷயங்களைச்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

சொல்லுங்கள்; துணைக் கேள்வியில், ஒரு வரியில் கேள்வி கேளுங்கள், அமைச்சர் ஒரு வரியில் பதில் சொல்லட்டும்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். வக்ஃப் ஆய்வாளர்கள், கண்காணிப்பாளர்களுக்குப் பதிலாக, ஒரு குழு அமைத்து, அதில் வக்ஃப் வாரியத் தலைவரும், உறுப்பினர்களும் இடம் பெற்று, அவர்கள் மட்டும்தான் தடையில்லாச் சான்றிதழ்கள் கொடுக்கமுடியும் என்ற நிலையை இந்த அரசு செய்வதற்கு முன்வருமா என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஓர் ஆலோசனையாகக் கேட்டிருக்கிறீர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களை வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து கடந்த ஆட்சிக் காலத்தில் **என்று சொன்னது, தவறான தகவல்களை அதற்குரிய அதிகாரிகள் கொடுத்த காரணத்தினால், அந்தத் தவறுகள் நடைபெற்றன என்பதைத்தான் சுட்டிக்காட்டினார்கள். அதற்கு நிர்வாகம் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு உதாரணமாக, இப்போது நாம் ஆட்சிப் பொறுப்பினையேற்ற இந்தக் குறுகிய காலத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் சென்னை நந்தனம் Nawab Fazeelathunnisa Begum Sahiba Masjid & Endowment & Arabic School–க்குப் பாத்தியப்பட்ட அண்ணா சாலையில் அமைந்துள்ள 7 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,800 சதுர அடி பரப்பிலான வக்ஃப் சொத்து ஆக்கிரமிப்பிலிருந்து 19–6–2021 அன்று மீட்கப்பட்டுள்ளது. அதைப்போல, சென்னை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஜானி ஜான் கான் சாலையில் அமைந்துள்ள ரொக்கையாபீ வக்ஃபிற்கு சொந்தமான 4 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,500 சதுர அடி பரப்பிலான வக்ஃப் சொத்து ஆக்கிரமிப்பிலிருந்து 28–7–2021 அன்று மீட்கப்பட்டுள்ளது. மேலும், திருச்சி டவுன், அஜரத் நபி சல்லலாவு அலைவ் அஸ்சலம் வக்ஃபிற்கு பாத்தியப்பட்ட சொத்து 14,750 சதுர அடி கொண்ட இடம் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்து மீட்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு 500–க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதை உடனடியாக முடிக்க அதற்கும் ஒரு குழு அமைத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிருவாகத்தில் ஏற்பட்ட அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள் கவனத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளிப்படைத் தன்மையோடு ஆட்சி நடத்துகின்ற இந்த நல்ல ஆட்சியில், நல்ல தீர்ப்புகள் விரைவில் வெளிவரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***4307—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், காவூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் விடையை அளிக்கிறேன்.*